# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1991 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, அரச கரும மொழிகள் ஆணைக்குழுச் சட்டம்

---

*[1991, மார்ச்சு மாதம் 27 ஆந் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

*1991 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 28 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

---

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : ரூபா 1.50* | *தபாற் செலவு : ரூபா 1.55*

1991 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, அரசகரும மொழிகள் ஆணைக்குழு சட்டம்.

[1991, மார்ச்சு 27 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ—ஓ 70/89

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரச கரும மொழிகள் ஆணைக்குழுவைத் தாபிப்பதற்கும்; அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:—

1. இச்சட்டமானது, 1991 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, அரச கரும மொழிகள் ஆணைக்குழுச் சட்டமென எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், அது, அதன் ஏற்பாடுகள் எல்லாம் அல்லது அவற்றில் ஏதேனும், தொடர்பில் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று அல்லது தேதிகளன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும். *சுருக்கப் பெயரும், நடைமுறைக்கு வரும் தேதியும்.*

## பாகம் I

### அரச கரும மொழிகள் ஆணைக்குழுவைத் தாபித்தல்

2. (இதனகத்துப் பின்னர் "ஆணைக்குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அரச கரும மொழிகள் ஆணைக்குழுவொன்று தாபிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அது, அப்போதைக்கு, 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் ஆணைக்குழுவின் உறுப்பினர்களாகவிருக்கின்றவர்களான ஆட்களைக் கொண்டிருத்தலும் வேண்டும். *அரசகரும மொழிகள் ஆணைக்குழுவைத் தாபித்தல்.*

3. ஆணைக்குழுவானது, 2 ஆம் பிரிவினால் அதற்கு ஒதுக்கப்பட்ட பெயரைக் கொண்ட, கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டுமென்பதுடன், இடையறாவழியுரிமையைக் கொண்டிருப்பதோடு, பொது இலச்சினையொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்; அத்துடன் அது அத்தகைய பெயரில் வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக அத்தகைய பெயரில் வழக்குத் தொடுக்கவும்படலாம். *ஆணைக்குழு கூட்டிணைக்கப்பட்டவொரு குழுவாதல் வேண்டும்.*

4. ஆணைக்குழுவின் இலச்சினையானது, ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டு உருவமைக்கப்பட்டவாறு இருத்தல் வேண்டுமென்பதுடன், ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய விதத்தில் மாற்றவும்படலாம். *ஆணைக்குழுவின் இலச்சினை.*

5. (1) ஆணைக்குழுவானது, சனாதிபதியினால் நியமிக்கப்பட வேண்டியவர்களான ஆறு உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும். அவர்களில் ஒருவர், (இதனகத்துப் பின்னர் "தவிசாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படுவார்) ஆணைக்குழுவின் தவிசாளராக இருப்பதற்கெனச் சனாதிபதியினால் பெயர்குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும். *ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்.*

(2) அரசகரும மொழிகள் திணைக்களத்தின் ஆணையாளரானவர், ஆணைக்குழுவின் செயலாளராகவிருத்தல் வேண்டும்.

ஆணைக்குழுவின் குறிக்கோள்கள்.

6. ஆணைக்குழுவின் பொதுவான குறிக்கோள்கள் பின்வருமாறு இருத்தல் வேண்டும்:—

(அ) அரச கரும மொழிகளின் உபயோகம் தொடர்பிலான கொள்கை நெறிகளை விதந்துரைத்தல், அத்துடன் அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்திலுள்ள ஏற்பாடுகளுடன் இசைந்தொழுகுவதைக் கண்காணித்தலும் மேற்பார்வை செய்தலும்;

(ஆ) (இதனகத்துப் பின்னர் "இயைபான மொழிகள்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அரசியலமைப்பின் 18 ஆம் உறுப்புரையில் குறிப்பீடு செய்யப்பட்டிருக்கும் மொழிகளின் உபயோகத்தை, அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் தாற்பரியத்துக்கும் நோக்கத்துக்கும் இணங்க உறுதிப்படுத்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய நடவடிக்கைகளையும் வழிமுறைகளையும் எடுத்தல்;

(இ) அரச கரும மொழிகள் நன்கு மதிக்கப்படுதலை மேம்படுத்துவதுடன், அவற்றின் அந்தஸ்து, சமத்துவம், உபயோக உரிமை என்பன ஏற்றுக்கொள்ளப்படுதலை, பேணப்படுதலை அத்துடன் தொடர்ந்து பேணப்படுதலை மேம்படுத்தல்;

(ஈ) அது தானாகச் செயற்பட்டும் அத்துடன் அதனால் பெறப்படும் எவையேனும் முறைப்பாடுகளிலிருந்தும், புலனாய்வுகளைச் செய்வதோடு இச்சட்டத்தின் ஏற்பாடுகளினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறான குறைதீர்ப்பு நடவடிக்கையை எடுத்தலும்.

ஆணைக்குழுவின் தத்துவங்கள்.

7. ஆணைக்குழுவானது, பின்வருவனவற்றைச் செய்வதற்கான தத்துவங்களைக் கொண்டிருத்தலும் வேண்டும்:—

(அ) இயைபான மொழிகள் எவற்றினதும் அந்தஸ்தை அல்லது உபயோகத்தைப் பாதிக்கின்ற அல்லது பாதிக்கக்கூடிய எவையேனும் ஒழுங்குவிதிகள், பணிப்புரைகள் அல்லது நிருவாக நடைமுறைகள் என்பனவற்றின் மீளாய்வினை ஆரம்பித்தல்;

(ஆ) இயைபான மொழிகள் அந்தஸ்தின் அல்லது உபயோகத்தின்மீது, அது அவசியமானதென அல்லது விரும்பத்தக்கதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய ஆய்வுகளை அல்லது கொள்கைப் பத்திரங்களை வழங்குதல் அல்லது நடைமுறைக்குக் கொண்டுவருதல்;

(இ) இயைபான மொழிகளின் அந்தஸ்தின் அல்லது உபயோகத்தின் மீது, அது விரும்பத்தக்கதெனக் கருதக்கூடியவாறான வெளியீடுகளுக்கு அல்லது வேறு வெகுசனத் தொடர்பு அறிக்கைகளுக்கு ஆதரவளிப்பது அல்லது அவற்றை ஆரம்பித்தல் உட்பட, அத்தகைய பொதுக் கல்விச் செயற்பாடுகளைப் பொறுப்பேற்று நடாத்துதல்;

(ஈ) கொள்வனவு என்ற முறையில் ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்வதற்கும், அத்துடன் அதனை வைத்திருத்தல், கொண்டிருத்தல், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு விடுதல், ஈடுவைத்தல், அடகுவைத்தல், விற்றல் அல்லது வேறுவகையாகக் கையுதிர்த்தல் போன்றவற்றுக்கும்; அத்துடன்

(உ) ஆணைக்குழுவின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான அல்லது அவற்றின் இடைநேர்விளைவான, அல்லது ஆணைக்குழுவின் எவையேனும் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு அவசியமாகக்கூடியவாறான அல்லது அவற்றின் இடைநேர்விளைவான அத்தகைய வேறு எல்லாக் கருமங்களையும் செய்தல்.

**குழுக்களை நியமித்தல்.**

8. (1) ஆணைக்குழுவானது, அதன் கடமைகளைப் புரிவதில் அதற்கு உதவியாயிருப்பதற்கு அவசியமாகக்கூடியவாறான, ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான உறுப்பினர்களைக் கொண்ட அத்தகைய குழுக்களை, காலத்துக்குக் காலம் நியமிக்கலாம், ஆயின், அத்தகைய ஏதேனும் குழுவின் தவிசாளரானவர் ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவராக இருத்தல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவானது, அது தகுந்ததெனக் கருதக்கூடியவாறான அதன் தத்துவங்களை (இவ்வுட்பிரிவினால் அதன்மேல் சுமத்தப்பட்டுள்ள தத்துவங்கள் தவிர்ந்த ஏனையவற்றை), (1) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட குழுவொன்றுக்குக் கையளிக்கலாம். ஆயின் அத்தகைய கையளிப்பு எவ்வாறிருப்பினும் ஆணைக்குழுவானது அத்தகைய தத்துவம் எதனையும் பிரயோகிக்கலாம்.

**ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் பதவிக் காலம்.**

9. (1) தவிசாளர் உட்பட, ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒவ்வொருவரும், இறப்பு அல்லது பதவிவிலகல்மூலம் அவர் பதவியை முன்னரே வறிதாக்கினாலொழிய, அவர் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்றாண்டுகள் காலத்துக்குப் பதவி வகித்தல் வேண்டும் என்பதுடன், மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும் :

ஆயின், இறப்பு அல்லது பதவிவிலகல்மூலம் பதவியை வறிதாக்கிய உறுப்பினர் ஒருவரின் இடத்துக்கு நியமிக்கப்படும் உறுப்பினர் ஒருவர், அவர் எவ்வுறுப்பினரை அடுத்து வருகின்றாரோ, அவ்வுறுப்பினரின் முடிவுறாதெஞ்சியுள்ள பதவிக்காலத்துக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

**பதவிவிலகலும் தற்காலிகமாக இலங்கையில் இல்லாதிருத்தலும்.**

10. (1) ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர், சனாதிபதிக்கு முகவரியிடப்பட்ட, அப்பயன்படத் தம்கைப்பட எழுதும் கடிதம்மூலம் எந்நேரத்திலும் அவரது பதவியிலிருந்து விலகலாம் என்பதுடன், அத்தகைய பதவிவிலகலானது, சனாதிபதியினால் எழுத்துமூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டதன் மேல் பயனுறுதலும் வேண்டும்.

(2) தவிசாளர் அல்லது ஆணைக்குழுவின் வேறு எவரேனும் உறுப்பினர், சுகவீனம், இயலாமை அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறு காரணமாகத் தம் பதவியின் கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாமலிருந்தால், அத்தகைய இயலாமை பற்றிச் சனாதிபதிக்கு எழுத்தில் அறிவிப்பது அத்தகைய உறுப்பினரின் கடமையாதல் வேண்டும். சனாதிபதியானவர், அதன் மேல், விடயத்துக்கு ஏற்றவாறு, அத்தகைய தவிசாளருக்காகப் பதிற் கடமையாற்ற வேறொரு உறுப்பினரை, அல்லது அத்தகைய வேறு உறுப்பினரின் இடத்தில் பதிற் கடமையாற்றத் தகுந்தவொரு ஆளை நியமிக்கலாம்.

ஊதியம்.

11. தவிசாளருக்கும் ஆணைக்குழுவின் வேறு உறுப்பினர்களுக்கும், நிதியென்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் கலந்தாலோசனையுடன், அமைச்சரால் தீர்மானிக்கப்பட வேண்டியதான அத்தகைய ஊதியமும் படிகளும், ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்படலாம்.

கூட்டங்கள்.

12. (1) தவிசாளர் சமுகமளித்திருந்தால், அவரே ஆணைக்குழுவின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமைதாங்குதல் வேண்டும். அத்தகைய ஏதேனும் கூட்டத்தில் தவிசாளரானவர் சமுகமளிக்காவிட்டால், சமுகமளித்திருக்கும் உறுப்பினர்கள், அவர்களிலிருந்து ஒருவரை, அத்தகைய கூட்டத்துக்கு தலைமைதாங்குவதற்கெனத் தெரிவுசெய்தல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவின் கூட்டமொன்றுக்கான கூட்ட நடப்பெண் நான்கு உறுப்பினர்களாதல் வேண்டும்.

(3) ஆணைக்குழுவானது, தேவைக்கேற்றவாறு கூடுதல் வேண்டும், அத்துடன் எந்த விடயத்திலும் ஆணைக்குழு தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய நேரத்திலும் இடத்திலும் ஆகக் குறைந்தது மாதத்துக்கு ஒரு தடவையாவது கூட்டத்தைக் கூட்டுதல் வேண்டும், என்பதுடன்; இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, ஆணைக் குழுவின் கூட்டங்கள் தொடர்பிலும் அவற்றிலான அலுவல்கள் தொடர்பிலும் நடவடிக்கைமுறையை ஒழுங்குபடுத்துதலும் வேண்டும்.

## பாகம் II

### ஆணைக்குழுவின் பணியாட்டொகுதி

பிரதம நிறைவேற்று அலுவலர்.

13. (1) தவிசாளரானவர் ஆணைக்குழுவின் பிரதம நிறைவேற்று அலுவலராக இருத்தல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவானது, தீர்மானத்தின் மூலம், இவ்வுட்பிரிவினால் அதற்கு வழங்கப்பட்டுள்ள தத்துவம் தவிர்ந்த, இச்சட்டத்தினால் அதன் மேல் சுமத்தப்பட்டுள்ள தத்துவங்களில் வேறு எதனையும் தவிசாளருக்குக் கையளிக்கலாம்; அத்துடன், அவருக்குக் கையளிக்கப்பட்ட அத்தகைய தத்துவங்களைப் பிரயோகிக்கையில், தவிசாளரானவர், ஆணைக் குழுவின் பொதுவான அல்லது விசேடமான பணிப்புரைகளுக்கு அமைந்தவராகவிருத்தலும் வேண்டும்.

(3) தவிசாளரானவர், அவர் ஆணைக்குழுவின் பிரதம நிறைவேற்று அலுவலராக இருப்பது, எவ்வாறிருப்பினும், ஆணைக்குழுவின் பணியாட்டொகுதியின் உறுப்பினர் ஒருவராகக் கருதப்படுதலாகாது.

(4) தவிசாளரானவர், ஆணைக்குழுவின் உறுப்பினரொருவரை அல்லது அலுவலர் எவரையும் ஆணைக்குழுவின் அன்றாட அலுவல்களின் திருவாகத்திற்குப் பொறுப்பாக இருப்பதற்கென நியமிக்கலாம்.

14. (1) ஆணைக்குழுவானது, அதன் அலுவலைச் செவ்வையாகவும், திறமையாகவும் கொண்டு நடாத்துவதற்கு அவசியமானதென அது கருதக்கூடியவாறான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமிக்கலாம். ஆணைக்குழுவின் பணியாட்டொகுதியை நியமனம் செய்தல் முதலியன.

(2) இச்சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்கமைவாக ஆணைக்குழுவானது—

(அ) அதன் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர் மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கலாம்; அல்லது அவரை வேலை நீக்கம் செய்யலாம்;

(ஆ) தாபனங்கள் பணிப்பாளருடனும் பொதுத் திறைசேரியின் (வரவு செலவுத் திட்டப்) பணிப்பாளருடனுமான கலந்தாலோசனையுடன், அத்தகைய அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் வேதனங்களை அல்லது சம்பளங்களை நிர்ணயிக்கலாம்;

(இ) அத்தகைய அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் சேவை நியதி நிபந்தனைகளைத் தீர்மானிக்கலாம்;

(ஈ) ஆணைக்குழுவின் அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் நலனுக்காக சகாய நிதியமொன்றையும் வேறு எவையேனும் நலன்புரிச் செயற்றிட்டங்களையும் தாபித்து ஒழுங்குபடுத்தலாம் என்பதுடன், அத்தகைய ஏதேனும் நிதியத்துக்கு உதவு தொகைகளையும் அளிக்கலாம்.

15. (1) ஆணைக்குழுவின் வேண்டுகோளின் பேரில், பகிரங்க சேவையிலுள்ள அலுவலர் எவரும், அவ்வலுவலரின் சம்மதத்துடனும், அவ்வலுவலர் எவ்வமைச்சினால் அல்லது எவ்வமைச்சின் கீழ் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளாரோ, அவ்வமைச்சின் செயலாளரினதும் அத்துடன், பொது நிருவாகம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாக இருக்கின்ற அமைச்சரினது அமைச்சுச் செயலாளரினதும் சம்மதங்களுடனும், ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய காலப் பகுதிக்கு அதையொத்த சம்மதத்துடன் ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம். ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்குப் பகிரங்க அலுவலர்களை நியமித்தல்.

(2) பகிரங்க சேவையிலுள்ள அலுவலர் எவரும் ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படுகின்றவிடத்து, 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அத்தகைய அலுவலருக்கும், அவர் தொடர்பிலும், ஏற்ற மாற்றங்களுடன், ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) பகிரங்க சேவையிலுள்ள அலுவலர் எவரும் ஆணைக்குழு பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுகின்றவிடத்து, 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அத்தகைய அலுவலருக்கும், அவர் தொடர்பிலும், ஏற்ற மாற்றங்களுடன், ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) அரசாங்கத்துடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தமொன்றின் படி அரசாங்கத்துக்குக் குறிக்குரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றுக்குச் சேவையாற்ற உடன்பட்டுக் கொண்ட ஆளெவரையும், ஆணைக்குழுவானது வேலைக்கு அமர்த்துகின்றவிடத்து, ஆணைக்குழுவுக்கு அவ்வாளினால் செய்யப்படும் சேவைக் காலப்பகுதியானது, அத்தகைய ஒப்பந்தத்தின் கீழான அவரது கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்கென அரசாங்கத்துக்குச் செய்யப்பட்ட சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

அரசாங்கம் போதிய நிதியங்களை ஏற்பாடு செய்தல்.

16. அரசாங்கமானது, இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழு அதன் தத்துவங்களைப் பிரயோகித்தலை அத்துடன் அதன் தொழிற்பாடுகளை நிறைவேற்றுதலை இயலச் செய்யும் நோக்கத்துக்காகப் போதுமான நிதியங்களை அதற்குக் கிடைக்குமாறு செய்தல் வேண்டும்.

ஆணைக்குழுவின் நிதியாண்டும் கணக்குகளின் கணக்காய்வும்.

17. (1) ஆணைக்குழு நிதியாண்டானது அரசாங்கத்தின் நிதியாண்டைப்போன்ற அதே நிதியாண்டாகவிருத்தல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவானது, அதனது வருவாய், செலவினம், சொத்துக்கள், பொறுப்புக்கள் அத்துடன் அதன் வேறு எல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் என்பன பற்றிய கணக்குப் புத்தகங்களை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்காய்வு தொடர்பிலான அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள், ஆணைக்குழுவினது கணக்குகளின் கணக்காய்வுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

## பாகம் III

### ஆணைக்குழுவினால் முறைப்பாடுகள் புலனாய்வு செய்யப்படுதல்.

முறைப்பாடுகளைப் புலனாய்வு செய்தல்.

18. இச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய, இயைபான மொழிகளின் அந்தஸ்து, உபயோகம் ஆகியவை தொடர்பில் ஏதேனும் பகிரங்க நிறுவனத்தின் அலுவல்கள் நிருவாகம் செய்யப்படுதலில் அல்லது செய்யப்படுகின்ற செயலில் இருந்து அல்லது செய்யப்படாமல் விடுவதிலிருந்து எழுகின்றதும், ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பிக்கப்படுகின்றதுமான ஒவ்வொரு முறைப்பாட்டையும், குறிப்பாக அத்தகைய முறைப்பாடானது—

(அ) அரசகரும மொழியொன்றின் அந்தஸ்து ஏற்றங்கீகரிக்கப்படவில்லை என்பதை வெளிக்காட்டுகின்றவிடத்து ; அல்லது

(ஆ) அரசியலமைப்பின் 20 இல் இருந்து 24 ஆம் உறுப்புரைகள் வரையிலான உறுப்புரைகளில் (இவ்விரண்டும் உட்பட) தாப்பட்டுள்ளவாறு இயைபான மொழிகள் எவற்றினதும் உபயோகத்துக்கான உரிமை அல்லது அவற்றின் உபயோகத்துக்கான கடமையொன்று ஏற்றங்கீகரிக்கப்படவில்லை அல்லது இணங்கியொழுகப்படவில்லையென வெளிக் காட்டுகின்றவிடத்து; அல்லது

(இ) இயைபான மொழிகள் எவற்றின் அந்தஸ்து அல்லது உபயோகம் தொடர்பில், பாராளுமன்றத்தின் ஏதேனும் சட்டத்தின் அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின், விதியின், கட்டளையின், அறிவிப்பின் அல்லது துணைவிதியின் ஏதேனும் ஏற்பாடு, அல்லது பகிரங்க நிறுவனம் ஒன்றினால் விடுக்கப்படும் ஏதேனும் பணிப்புரை, அல்லது பகிரங்க நிறுவனம் ஒன்றின் நிருவாக நடைமுறை எதுவும் அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்துக்கு இயைய இணங்கியொழுகப்படவில்லையென வெளிக்காட்டுகின்றவிடத்து ; அல்லது

(ஈ) அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் குறிக்கோள்களும் நோக்கமும் மதிக்கப்படவில்லை அல்லது இணங்கியொழுகப்படவில்லையென வெளிக்காட்டுகின்றவிடத்து,

ஆணைக்குழுவானது, புலனாய்வு செய்தல் வேண்டும்.

19. (1) ஆணைக்குழுவானது, அதன் தற்றுணிபைப் பிரயோகிக்கையில், அது— ஆணைக்குழுவானது புலனாய்வு செய்ய மறுக்கலாம் அல்லது புலனாய்வு செய்வதை நிறுத்தலாம்.

(அ) முறைப்பாட்டின் விடயப்பொருள் அற்பமானதென ;

(ஆ) முறைப்பாடானது விழலானது அல்லது எரிச்சலூட்டுகின்றது அல்லது நல்லெண்ணத்துடன் செய்யப்படாததொன்றென;

(இ) முறைப்பாட்டின் விடயப்பொருளானது, எக்காரணத்தைக் கொண்டும் அதனது தத்துவங்களுக்குள் அடங்கவில்லையென ; அல்லது

(ஈ) புலனாய்வொன்றைத் தொடங்குதல் அல்லது அதைத் தொடர்தலானது, ஏதேனும் காரணத்துக்காக, அவசியமற்றதென ;

திருப்திப்பட்டால், முறைப்பாடு எதனையும் புலனாய்வு செய்ய மறுக்கலாம் அல்லது புலனாய்வு செய்வதை நிறுத்தலாம்.

(2) ஆணைக்குழுவானது, ஏதேனும் முறைப்பாட்டைப் புலனாய்வு செய்ய மறுக்கின்றவிடத்து அல்லது புலனாய்வு செய்வதிலிருந்தொழிகின்றவிடத்து, அத்தகைய முடிவை எடுத்ததிலிருந்து பதினான்கு நாட்களுக்குள் அம்முடிவு பற்றி முறைப்பாட்டாளருக்கு அறிவித்தல் கொடுக்கவேண்டுமென்பதுடன், அம்முடிவுக்கான காரணங்கள் பற்றிய எழுத்திலான பிரதியொன்றை வழங்குதலும் வேண்டும்.

புலனாய்வு செய்வதில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறை.

20. (1) இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, ஆணைக்குழுவானது இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் புலனாய்வு செய்வதில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறையைத் தீர்மானிக்கலாம்.

(2) எச்செயலுடன் அல்லது செய்யாமையுடன் முறைப்பாடானது தொடர்புடையதோ, அச்செயலினால் அல்லது செய்யாமையினால் நேரடியாகப் பாதிக்கப்பட்டிருக்கக்கூடியவாறான எவரேனும் ஆளினால் ஆட்கள் குழுவினால், அல்லது எச்செயல் அல்லது செய்யாமை ஒன்றுக்கு ஆணைக்குழுவின் புலனாய்வு தேவைப்படுகிறது என அபிப்பிராயப்பட்டு அதனை, நல்லெண்ணத்துடன் ஆணைக்குழுவின் கவனத்துக்குக் கொண்டு வருவதில் செயல்படுகின்றவரும் அல்லது செயல்படுகின்றவர்களுமான இறந்தவர்களாயிருக்கக் கூடியவர்களினால், ஆணைக்குழுவுக்கு முறைப்பாடொன்று செய்யப்படலாம்.

(3) முறைப்பாடானது இரகசியத்தகவலொன்றாக எடுத்துக் கொள்ளப்படுதல் வேண்டுமென்பதுடன், புலனாய்வானது, சம்பந்தப்பட்ட தனியாட்களின் அந்தரங்கத் தன்மையைப் பாதுகாக்க முயற்சித்தலும் வேண்டும்.

(4) இச்சட்டத்தின் கீழான முறைப்பாடொன்றைப் புலனாய்வு செய்வதற்கு முன்னர், ஆணைக்குழுவானது, முறைப்பாடு எப்பகிரங்க நிறுவனத்துடன் தொடர்புடையதோ, அப்பகிரங்க நிறுவனத்தின் தலைவருக்கு, அத்தகைய புலனாய்வொன்று நடாத்துவதற்கான அதனது முன்னெண்ணத்தைப்பற்றி அறிவித்தல் வேண்டுமென்பதுடன், முறைப்பாட்டாளரின் அதற்கான முன் சம்மதம் ஆணைக்குழுவினால் பெறப்பட்டிருந்தாலொழிய, முறைப்பாட்டாளரின் அடையாளத்தை, ஆளெவருக்கும் வெளிவிடுதலும் ஆகாது.

(5) ஆணைக்குழுவானது, தனியான முறைப்பாடொன்றின்மீது புலனாய்வொன்று நடாத்துதலை, ஆணைக்குழுவினது செயலாளருக்கு கையளிக்கலாம்.

புலனாய்வுகள் நடாத்துவது தொடர்பாக ஆணைக்குழுவுக்குள்ள தத்துவங்கள்.

21. இச்சட்டத்தின்கீழ் புலனாய்வு அல்லது மீளாய்வு ஒன்று நடாத்துதல் தொடர்பில், ஆணைக்குழுவானது—

(அ) சாட்சிகளை அழைப்பதற்கும், அவசியமென அது கருதக்கூடியவாறான எல்லா ஆவணங்களையும் சமர்ப்பிக்கும்படி கட்டாயப்படுத்துவதற்கும் ;

(ஆ) சத்தியம் எடுத்தோதுவித்தலுக்கும், அத்துடன் சத்தியப்பிரமாணத்தின்கீழ் வாய்மொழிச்சான்று அல்லது எழுத்திலான சான்று அளிக்கும்படி சாட்சிகளை கட்டாயப்படுத்துவதற்கும்;

(இ) அதன் நற்றுணிபின்பேரில், அது, தகுந்ததெனக் கருதக்கூடிய வாறான வேறு ஏதேனும் தகவலை அல்லது சான்றை, அத்தகைய தகவலின் சான்றுப் பெறுமதியை அல்லது நீதிமன்றமொன்றில் சான்றாவதைப் பொருட்படுத்தாது, பெற்றுக்கொள்வதற்கும், ஏற்றுக்கொள்வதற்கும்;

(ஈ) அது தகுந்ததெனக் கருதக்கூடியவாறான அத்தகைய புலனாய்வுகளை ஏதேனும் பகிரங்க நிறுவனத்தின் வளவுகளில் நடாத்துவதற்கும்,

தத்துவமுடையதாயிருத்தல் வேண்டும்.

22. (1) இச்சட்டத்தின்கீழ் புலனாய்வொன்று அல்லது மீளாய்வு ஒன்று அல்லது ஆய்வொன்று நடாத்துகையில், ஆணைக்குழுவை, எவையேனும் விசாரித்தல்களை நடாத்துமாறு தேவைப்படுத்துதலாகாது, அத்துடன் தனியாள் எவரும் அல்லது பகிரங்க நிறுவனம் எதுவும், உரிமையென்ற வகையில் விசாரிக்கப்படுவதற்கு உரித்துடையவராதலாகாது அல்லது உரித்துடையதாதலாகாது. **உரிமையென்ற வகையில் விசாரிக்கப்படுவதற்கு உரித்தெதுவும் இருத்தலாகாது.**

(2) ஏதேனும் புலனாய்வின்போது அல்லது மீளாய்வின்போது, எவரேனும் தனியாளைப்பற்றி அல்லது ஏதேனும் பகிரங்க நிறுவனத்தைப்பற்றிப் பாதகமானமுறையில் பிரதிபலிக்கக்கூடிய அல்லது பாதகமானமுறையில் பாதிக்கக்கூடிய அறிக்கையொன்றை அல்லது விதப்புரையொன்றைச் செய்வதற்குப் போதுமான ஏதுக்கள் இருக்கின்றன என ஆணைக்குழுவானது கண்டால், அது, புலனாய்வை முடிப்பதற்கு முன்னர், அத்தகைய தனியாளுக்கு அல்லது பகிரங்க நிறுவனத்திற்கு, அத்தகைய தனியாள் அல்லது பகிரங்க நிறுவனம்பற்றிய எவையேனும் குறிப்புரைகளுக்கு அல்லது குறைகூறல்களுக்குப் பயனுறும்வகையில் பதிலளிப்பதற்கானதொரு சந்தர்ப்பத்தை வழங்குவதற்கு அவசியமாகக்கூடியவாறான எல்லா நியாயமான வழிமுறைகளையும் எடுத்தல்வேண்டும்.

23. (1) இச்சட்டத்தின்கீழ் புலனாய்வொன்றை நடாத்தியபின்னர், ஆணைக்குழுவானது:— **ஆணைக்குழு, அதன் புலனாய்வுபற்றி அறிக்கை செய்தல் வேண்டும்.**

(அ) புலனாய்வொன்றின் விடயப்பொருளாகவிருந்த செயல் அல்லது செய்யாமைபற்றி, சம்பந்தப்பட்ட பகிரங்க நிறுவனத்துக்கு, சீர்தூக்கிப் பார்ப்பதற்காகவும் நடவடிக்கை எடுப்பதற்காகவும் ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென;

(ஆ) பகிரங்க நிறுவனமொன்றின் பணிப்புரை எதுவும் மீளச் சீர்தூக்கிப் பார்க்கப்பட வேண்டுமென, அல்லது அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் மீறுகையொன்றுக்கு இட்டுச்செல்லுகின்ற அல்லது இட்டுச்செல்லக்கூடிய சாத்தியக்கூறுள்ள நடைமுறையெதுவும் மாற்றப்பட வேண்டுமென அல்லது கைவிடப்பட வேண்டுமென; அல்லது

(இ) வேறு நடவடிக்கையெதுவும் எடுக்கப்பட வேண்டுமென, அபிப்பிராயப்பட்டால், அது, அவ்வபிப்பிராயத்தையும் அதற்கான காரணத்தையும் அத்தகைய பகிரங்க நிறுவனத்தின் தலைவருக்கு அறிவித்தல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழ் புலனாய்வொன்றை நடாத்தியபின்னர், முறைப்பாடானது எண்பிக்கப்படவில்லையென் ஆணைக் குழுவானது, திருப்திப்பட்டால், அது அவ்வபிப்பிராயத்தையும் அதற்கான காரணங்களையும் முறைப்பாட்டாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

(3) முறைப்பாடு கோப்பிடப்பட்டதிலிருந்து அறுபது நாட்களுக்குள் ஆணைக்குழுவானது அதன் அறிக்கையைச் செய்தல்வேண்டும்; அத்துடன், ஆணைக்குழுவின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட காரணங்களுக்காகப் புலனாய்வானது முடிக்கப்பட இயலாதிருந்தால், ஆணைக்குழுவானது, தாமதத்துக்கான காரணங்களைக் காட்டுகின்ற இடைக்கால அறிக்கையொன்றை, அறுபது நாட்களுக்குள் செய்தல் வேண்டும்.

(4) மூன்றும் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் இறுதி அறிக்கையானது, முறைப்பாடு செய்யப்பட்டதிலிருந்து நூற்று இருபது நாட்களுக்குள் கிடைக்கக்கூடியதாயிருத்தல் வேண்டும்; அத்துடன், ஆணைக்குழுவானது, அத்தகைய அறிக்கையின் பிரதியொன்றை முறைப்பாட்டாளருக்கு உடனடியாகக் கிடைக்கக்கூடியதாகச் செய்தலும் வேண்டும்.

(5) ஆணைக்குழுவானது, மூன்றும் உட்பிரிவின்கீழ் கோப்பிடப்பட வேண்டிய அறிக்கையில், அது தகுந்ததெனக் கருதுகின்ற அத்தகைய விதப்புரைகளைச் செய்யலாம் என்பதுடன், சம்பந்தப்பட்ட பகிரங்க நிறுவனத்தின் தலைவரை, அவ்விதப்புரைகளுக்குப் பயன்கொடுப்பதற்காக என்ன நடவடிக்கை எடுக்க நிறுவனம் உத்தேசித்துள்ளது என்பதை, ஏதேனும் இருந்தால், குறித்துரைக்கப்பட்ட காலத்துள் ஆணைக்குழுவுக்கு அறிவிக்குமாறு பணிக்கலாம்.

குறித்தசில சூழ்நிலைகளில் உயர் நீதிமன்றத்துக்கு மனுச்செய்யப்படல்.

24. (1) இச்சட்டத்தின்கீழ் ஆளெவரும், ஆணைக்குழுவுக்கு முறைப்பாடொன்றைச் செய்திருந்து, அத்துடன் ஆணைக்குழுவானது—

(அ) முறைப்பாடு செய்யப்பட்டதிலிருந்து நூற்று இருபது நாட்களுக்குள் புலனாய்வின் முடிபுகள்பற்றி அவருக்கு அறிவித்திருக்காதவிடத்து; அல்லது

(ஆ) பத்தொன்பதாம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் புலனாய்வு செய்ய மறுக்கின்ற அல்லது புலனாய்வு செய்தலிலிருந்தொழி கின்ற அதன் முடிபை அவருக்கு அறிவித்திருக்கின்றவிடத்து; அல்லது

(இ) ஆணைக்குழுவின் திருப்திக்கேற்ப முறைப்பாடு என்பிக்கப்பட வில்லையென, 23 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ், அவ ருக்கு அறிவித்துள்ளவிடத்து,

அவர், விடயத்துக்கேற்றவாறு, (அ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப் பட்டுள்ள காலப்பகுதி முடிவுற்றதிலிருந்து முப்பது நாட்களுக்குள், அல் லது (ஆ), (இ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள தகவல் கிடைத்ததன்பின்னர், 27 ஆம் பிரிவின்கீழான நிவாரணத்துக்காக அல்லது குறைதீர்ப்புக்காக உயர்நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்கலாம்.

(2) அத்தகைய ஒவ்வொரு விண்ணப்பமும், வலுவில் இருக்கக்கூடிய வாறான அத்தகைய விதிகளுக்கு இணங்க உயர்நீதிமன்றத்துக்கு முகவரி யிடப்பட்ட, நிவாரணத்துக்கு அல்லது குறைதீர்ப்புக்கு இரங்கிக் கேட் கின்றதான, எழுத்திலான மனுமூலம் செய்யப்படல் வேண்டும். அத் தகைய மனுவானது, அது செய்யப்படுவதற்கான உயர்நீதிமன்றத்தின், முன் அனுமதி பெற்றிருந்தால்மட்டுமே செய்யப்படலாம்.

குறித்தசில சூழ்நிலைகளில் மாகாண மேல் நீதிமன்றத் துக்கு விண் ணப்பம் செய் யப்படுதல்.

25. (1) இச்சட்டத்தின்கீழ் ஆளொருவர், ஆணைக்குழுவுக்கு முறைப் பாடொன்று செய்து, ஆணைக்குழுவானது அத்தகைய முறைப்பாடு தொடர்பில், 23 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின்கீழான அறிக்கை யொன்றில் விதப்புரைகள் செய்து, அத்துடன், சம்பந்தப்பட்ட பகிரங்க நிறுவனத்தின் தலைவர் அத்தகைய விதப்புரைகளுக்கு, அவற்றை அவர் பெற்றுக்கொண்டதிலிருந்து தொண்ணூறு நாட்களுக்குள் பயன்கொடுத் திருக்காதவிடத்து, அத்தகைய ஆள் அல்லது அரச கருமமொழிகள் திணைக்கள ஆணையாளர், சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு எழுத்தில் அறிவித்தபின்னர், அத்தகைய விதப்புரைகளுக்கு வலுக்கொடுத்திருக்க வேண்டியதான காலம் முடிவடைந்ததிலிருந்து தொண்ணூறு நாட் களினுள், 27 ஆம் பிரிவின்கீழான பணிப்புரையொன்றை பெறுவதற்காக அவர் எம்மாகாணத்தில் வதிகின்றாரோ, அம்மாகாணத்திற்கென, அரசிய லமைப்பின் 154ஒ என்னும் உறுப்புரையின்கீழ் தாபிக்கப்பட்ட மேல் நீதி மன்றத்துக்கு விண்ணப்பிக்கலாம்.

(2) அத்தகைய விண்ணப்பம் ஒவ்வொன்றும், அத்தகைய மேல் நீதி மன்றத்துக்கு முகவரியிடப்பட்ட, எழுத்திலான மனுமூலம் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், அது, குடியியல் நடவடிக்கைமுறைச்சட்டக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தில் தாபப்பட்டுள்ள நடவடிக்கை முறைக்கு இணங்க விசாரிக்கப்பட்டுத் தீர்மானிக்கப்படுதலும் வேண்டும்.

உயர் நீதி மன்றமானது விண்ணப்பம் எதனையும் அதற்கு மாற்றுமாறு மாகாணத்தின் மேல் நீதிமன்றம் மொன்றை பணித்தல்.

26. உயர்நீதிமன்றமானது, பொதுநலன் அவ்வாறு தேவைப்படுத்துமிடத்து, சட்டத்துறைத் தலைமையதிபதியின் அல்லது ஆணைக்குழுவின் விண்ணப்பத்தின் மேல், மாகாணமொன்றுக்குத் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றமெதனையும், இச்சட்டத்தின்கீழ் அத்தகைய மேல் நீதிமன்றத்துக்குச் செய்யப்பட்டு, அந்நீதிமன்றத்தில் முடிவுறாதிருக்கும் விண்ணப்பம் எதனையும் உயர்நீதிமன்றத்துக்கு மாற்றுமாறு பணிக்கலாம். அத்தகைய பணிப்பின் மேல் விண்ணப்பமானது, உயர்நீதிமன்றத்துக்கு மாற்றப்படுதல் வேண்டும் என்பதுடன் உயர்நீதிமன்றமானது, அதன்மேல் அத்தகைய விண்ணப்பத்தை விசாரித்துத் தீர்மானித்தலும் வேண்டும்.

நீதியானதும், ஒப்புரவானது மானதென அல்லது தோதானதெனக் கருதுகின்ற அத்தகைய நிவாரணத்தை வழங்கலாம்.

27. (அ) பகிரங்க நிறுவனமொன்று அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்துடன், அல்லது அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துகின்ற ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுடன், இசைந்தொழுகத் தவறியிருக்கின்றதென, 24 ஆம் அல்லது 25 ஆம் பிரிவின் கீழ் உயர்நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டிருக்கின்ற வழக்கு நடவடிக்கைகளில் உயர்நீதிமன்றமானது தீர்மானித்திருக்கின்றவிடத்து, அது விடயத்தின் எல்லாச் சூழ்நிலைகளிலும், நீதியானதும், ஒப்புரவானதுமானதென அல்லது தோதானதெனக் கருதுகின்ற அத்தகைய நிவாரணத்தை வழங்கலாம் அல்லது அத்தகைய பணிப்புரையை விடுக்கலாம் ; அல்லது

(ஆ) இருபத்துமூன்றும் பிரிவின்கீழ் மேல் நீதிமன்றத்தில் வழக்கு நடவடிக்கைகள் தொடுக்கப்பட்டு, ஆணைக்குழுவின் விதப்புரைகளுக்குப் பகிரங்க நிறுவனமொன்றின் தலைவர் பயன் கொடுத்திருக்கவில்லையென மேல் நீதிமன்றமானது, தீர்மானித்திருக்குமிடத்து, மேல் நீதிமன்றமானது ஆணைக்குழுவின் அறிக்கையிலுள்ள விதப்புரைகளை நடைமுறைப் படுத்துமாறு பணித்தல் வேண்டும்.

ஏதேனும் இயைபான மொழியில் அலுவலகக் கடமைகளைச் செய்வதற்கு தேவைப்படுத்தப்பட்டவர்களான பகிரங்க அலுவலர்கள் குறித்தசில சூழ்நிலைகளில் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல்.

28. (1) எந்தப் பகிரங்க அலுவலர் ஒருவர், அவரது அலுவலகக் கடமைகளை புரிகையில் ஏதேனும் குறிப்பிட்ட இயைபான மொழியில் அத்தகைய கடமைகள் தொடர்பிலான அலுவலைக் கொண்டுநடாத்தும்படி, அல்லது ஏதேனும் கடிதத் தொடர்பை பெற்றுக்கொள்ளும்படி அல்லது செய்யும்படி, அல்லது ஏதேனும் இடாப்பிலிருந்து, பதிவேட்டிலிருந்து, அல்லது வேறு ஆவணத்திலிருந்து ஏதேனும் பிரதியை அல்லது பொழிப்பை வழங்குமாறு தேவைப்படுத்தப்படுகின்றாரோ அந்தப் பகிரங்க அலுவலரொருவர் வேண்டுமென்று அத்தகைய இயைபான மொழியில் அத்தகைய அலுவலைக் கொண்டு நடாத்துவதற்கு, அத்தகைய கடிதத்தொடர்பைப் பெற்றுக்கொள்வதற்கு அல்லது செய்வதற்கு அல்லது அத்தகைய பிரதியை அல்லது பொழிப்புகளை வழங்குவதற்குத் தவறுமிடத்து அல்லது அசட்டையாக இருக்குமிடத்து, அவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், ஆயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கு அல்லது

மூன்று மாதங்களுக்கு மேற்படாதவொரு காலத்திற்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணமும் மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) சட்டத்துறைத் தலைமையதிபதியின் முன்னைய அனுமதியுடனன்றி, (1) ஆம் உட்பிரிவின் கீழ் குற்றவழக்கெதுவும் தொடுக்கப்படுதலாகாது.

## பாகம் IV

### நானாவித ஏற்பாடுகள்

29. (1) இச்சட்டத்திலுள்ளது எதுவும், ஆணைக்குழுவுக்கு எச்செயல் அல்லது செய்யாமை தொடர்பில் முறைப்பாடொன்று செய்யப்படக்கூடுமோ, அச்செயல் அல்லது செய்யாமை தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தில் அல்லது வேறு ஏதேனும் நியாயவரங்கில், ஆளொருவருக்கு இருக்கக்கூடிய வழக்கு நடவடிக்கை எடுக்கும் வேறு ஏதேனும் உரிமையைப் பங்கப்படுத்துதலோ அல்லது அவ்வுரிமையின் மதிப்பைக் குறைத்தலோ ஆகாது. ஏதேனும் நீதிமன்றத்தில் நியாயவரங்கில் நடவடிக்கை எடுக்கும் உரிமையொன்றை இச்சட்டத்தின் ஏற்பாடுகள் பங்கப்படுத்துதலாகாது.

(2) ஆணைக்குழுவானது, நீதிமன்றத்தின் அனுமதியுடன், அத்தகைய தோற்றுதல் பொது நலனுக்கானதாகவிருக்கும் என அது கருதினால், ஏதேனும் பகிரங்க நிறுவனத்தில் இயைபான மொழியெதனதும் அந்தஸ்து அல்லது உபயோகம் தொடர்பிலான ஏதேனும் நீதித்துறை விசாரணையில் அல்லது அதையொத்த விசாரணையில், சுதந்திரமான குழுவொன்றாக, அது தோற்றலாம்.

30. (1) ஆணைக்குழுவானது, அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுடன் பகிரங்க நிறுவனங்கள் இசைந்தொழுகுவதைக் கண்காணிப்பதற்காக, காலாகாலம், தானாகவே புலனாய்வுகளை அல்லது மீளாய்வுகளை மேற்கொள்வதற்குத் தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும், என்பதுடன், அது மேலும் அத்தகைய முன்னைய புலனாய்வு தொடர்பில் அதனால் செய்யப்பட்ட விதப்புரைகள் நடைமுறைப்படுத்தப்படுவதைக் கண்காணிப்பதற்காக தொடர்ந்து புலனாய்வுகளை அல்லது மீளாய்வுகளை மேற்கொள்ளலாம். தானாகவே புலனாய்வை மேற்கொள்வதற்கு, ஆணைக்குழுவானது தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் III ஆம் பாகத்தின் ஏற்பாடுகளின் கீழ் செய்யப்படும் முடிவுகளும் விதப்புரைகளும், ஆணைக்குழுவானது எம்முறையினை மிகத் தோதானதாகக் கருதுகின்றதோ அம்முறையில், ஒன்றில் ஆணைக்குழுவின் ஆண்டறிக்கைகளில் உள்ளடக்கப்படலாம், அல்லது விசேட வெளியீடுகளில் வெளியிடப்படலாம்.

31. அரசகரும மொழிகளுள் ஏதேனும் ஒன்றின் அந்தஸ்து அல்லது உபயோகம் தொடர்பிலான ஏதேனும் விடயத்தின் மீது, ஆணைக்குழு அவசியமானதென அல்லது விரும்பத்தக்கதெனக் கருதக்கூடிய கொள்கைப் பத்திரங்களை அல்லது ஆய்வுகளை ஆணைக்குழுவானது தயாரிப்பதிலிருந்து, அல்லது நடைமுறைப்படுத்துவதிலிருந்து அல்லது வழங்குவதிலிருந்து அதை மட்டுப்படுத்துவதாக, இச்சட்டத்திலுள்ள எதுவும் வாசிக்கப்படுதலோ அல்லது பொருள் கொள்ளப்படுதலோ ஆகாது என்பதுடன், குறிப்பாகப் பொதுநலன்னது அவ்வாறு தேவைப்படுத்துகின்றவிடத்து, அரசியலமைப்பின் II ஆம் அத்தியாயம் தொடர்பான ஏதேனும் விடயத்தின்மீது கவனமெடுத்து விதப்புரைகள் செய்வதிலிருந்தும், அத்துடன் பகிரங்க நிறு இரு அரசகரும மொழிகளில் ஏதேனும் ஒன்றின் உபயோகம் தொடர்பிலான ஏதேனும் விடயத்தின் மீது ஆணைக்குழுவானது கொள்கைப் பத்திரங்களை வழங்குதல்.

வனம் என்பதன் வரைவிலக்கணத்துக்குள் வராத நிறுவனங்களுக்கு அதனை ஏற்புடையதாக்குவதிலிருந்தும் அல்லது நீடிப்பதிலிருந்தும் மட்டுப்படுத்துவதாக, இச்சட்டத்திலுள்ள எதுவும் வாசிக்கப்படுதலோ அல்லது பொருள் கொள்ளப்படுதலோ ஆகாது.

ஆணைக்குழுவானது ஆண்டறிக்கையொன்றைச் சமர்ப்பித்தல்.

32. ஆணைக்குழுவானது, ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும், அந்த ஆண்டில், 23 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின்கீழ் அத்தகைய ஆணைக்குழுவினால் செய்யப்பட்ட விதப்புரைகள் உள்ளடங்கலாக, அறிக்கையொன்றினை அமைச்சருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அமைச்சரானவர், அத்தகைய அறிக்கையினை பாராளுமன்றத்தின் முன் கொண்டுவரச் செய்தல் வேண்டும்.

ஆணைக்குழுவின் உறுப்பினர்கள், அலுவலர்கள், அத்துடன் சேவையாளர்கள் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல்.

33. ஆணைக்குழுவின் எல்லா உறுப்பினர்களும், அலுவலர்களும், அத்துடன் சேவையாளர்களும், தண்டனைச்சட்டக் கோவையின் கருத்தெல்லைக்குள்ளும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படல் வேண்டும்.

இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள், ஆணைக்குழுவானது, அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல்.

34. ஆணைக்குழுவானது, இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள், அதற்கிணங்கப் பொருள் கொள்ளப்படுதலும் வேண்டும்.

ஆணைக்குழுவினது பணிப்புரையின்மேல், இச்சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கையிலிருந்து ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் முதலியோர் பாதுகாக்கப்படுதல்.

35. (1) ஆணைக்குழுவுக்கெதிராக, அல்லது ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினருக்கு அல்லது அதன் எவரேனும் அலுவலருக்கு அல்லது சேவையாளருக்கு எதிராக, இச்சட்டத்தின்கீழ் அல்லது ஆணைக்குழுவின் பணிப்புரையின்மேல், நல்லெண்ணத்துடன் அவரினால் செய்யப்பட்ட ஏதேனும் செயலுக்காக தொடர்ச்சி அல்லது வழக்குத் தொடர்தல் எதுவும் இருத்தலாகாது.

(2) ஆணைக்குழுவினால் அல்லது ஆணைக்குழுவுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட ஏதேனும் தொடர்ச்சியில் அல்லது வழக்குத் தொடர்தலில் ஆணைக்குழுவினால் உறப்படும் செலவு எதுவும் ஆணைக்குழுவினால் செலுத்தப்படுதல் வேண்டும். அத்துடன், அத்தகைய ஏதேனும் தொடர்ச்சியில் அல்லது வழக்குத் தொடர்தலில், ஆணைக்குழுவுக்குச் செலுத்தப்படும் அல்லது ஆணைக்குழுவினால் பெறப்படும் செலவுத்தொகைகள் எவையும், திரட்டு நிதியத்தில் வரவு வைக்கப்படுதலும் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழ் அல்லது ஆணைக்குழுவின் பணிப்புரையின்மேல், (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளவாறான ஆளினால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில், அவருக்கு எதிராக ஏதேனும் நீதிமன்றத்தில் கொணரப்படும் ஏதேனும் தொடர்ச்சியில் அல்லது வழக்குத் தொடர்தலில் அத்தகைய எவரேனும் ஆளினால் உறப்படும் செலவு எதுவும், நீதிமன்றமானது, அச்

செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதெனக் கொண்டால், அத்தகைய செலவானது, அத்தகைய குடர்ச்சியில் அல்லது வழக்குத் தொடர்தலில் அவரினால் அறவிடப்பட்டாலொழிய, ஆணைக்குழுவினால் செலுத்தப்படுதல் வேண்டும்.

36. ஆணைக்குழுவுக்கு எதிராகக் கொண்டுவரப்படும் ஏதேனும் வழக்கில், ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவருக்கெதிராக அல்லது அவரின் ஆதனத்துக்கெதிராக, எழுத்தாணை எதுவும் வழங்கப்படுதலாகாது. **உறுப்பினர் ஒருவருக்கெதிராக அல்லது அவரின் ஆதனத்துக்கெதிராக எழுத்தாணை எதுவும் வழங்கப்படாமை.**

37. (அ) இச்சட்டத்தின் கீழ் புலனாய்வொன்று அல்லது மீளாய்வொன்று நடந்துகொண்டிருக்கும்போது, அல்லது அது முடிவுற்றதன் பின்னர் போதுமான காரணமின்றி ஆணைக்குழுவுக்கு அல்லது அதன் உறுப்பினர் எவருக்கும் அவமதிப்பைக் கொண்டுவருவதற்கான, ஏதேனும் கூற்றை வெளியிடுகின்ற அல்லது எதனையும் செய்கின்ற; **தவறுகள்.**

(ஆ) ஆணைக்குழுவின் நடவடிக்கையில் தலையிடுகின்ற;

(இ) ஆணைக்குழுவின் உறுப்பினர், அலுவலர் அல்லது சேவையாளர் ஒருவரை, இச்சட்டத்தினால் அவர்மேல் சுமத்தப்பட்டுள்ள தத்துவம் எதனையும் அத்தகைய உறுப்பினர், அலுவலர் அல்லது சேவையாளர் பிரயோகிக்கையில், எதிர்க்கின்ற அல்லது தடைசெய்கின்ற;

(ஈ) இச்சட்டத்தின்கீழான ஏதேனும் புலனாய்வு அல்லது மீளாய்வு நடந்துகொண்டிருக்கையில்—

(i) ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட ஏதேனும் அழைப்பாணையில் குறிக்கப்பட்டுள்ள இடத்திலும் நேரத்திலும் ஆணைக்குழுவின் அபிப்பிராயப்படி நியாயமான காரணமின்றித் தோன்றத் தவறுகின்ற;

(ii) சத்தியப் பிரமாணம் எடுக்க மறுக்கின்ற அல்லது முறையாகச் சத்தியப் பிரமாணம் எடுத்த பின்னர், ஆணைக்குழுவினால் புலனாய்வு செய்யப்பட்டுக் கொண்டிருக்கும் விடயங்கள் தொடர்பில், ஆணைக்குழுவினால் அவருக்கு விடுக்கப்பட்டனவுமான வினாக்களுக்கு ஆணைக்குழுவின் அபிப்பிராயப்படி நியாயமான காரணமின்றி, மறுமொழி கொடுக்க மறுக்கின்ற அல்லது மறுமொழி கொடுக்கத் தவறுகின்ற ;

(iii) ஆணைக்குழுவினால் புலனாய்வு செய்யப்பட்டுக் கொண்டிருக்கும் விடயங்களின் உண்மைத் தன்மையை அறிந்து கொள்வதற்கு அவசியமானதென ஆணைக்குழு அபிப்பிராயப்படுகின்றதும், அத்துடன் அவரின் உடைமையில் அல்லது தத்துவத்தில் இருக்கின்றதுமான, ஏதேனும் ஆவணத்தையோ அல்லது வேறு பொருளையோ, ஆணைக்குழுவின் அபிப்பிராயத்தில், நியாயமான காரணமின்றி, காட்ட மறுக்கின்ற அல்லது தவறுகின்ற,

ஆளெவரும், இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னிலையிலான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது மூன்று ஆண்டுகளை விஞ்சாத காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்கான ஏதேனும் வழக்குத் தொடர்தலில், அத்தகைய தவறாக அமைகின்றதெனச் சார்த்தப்படுகின்ற நிகழ்வுகளைத் தருகின்றதான, ஆணைக்குழுவின் செயலாளரின் ஒப்பந்தத்துடனான சான்றிதழொன்று சான்றாக ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கு மாறானது எண்பிக்கப்பட்டாலொழிய, அத்தகைய சான்றிதழாகக் கருதப்படுதலும் வேண்டுமென்பதுடன், அதில் கூறப்பட்டுள்ள நிகழ்வுகளுக்கான முதற் தோற்றச் சான்றுதலும் வேண்டும்.

ஆட்கள் குழுக்களினால் புரியப்படும் தவறுகள்.

38. இச்சட்டத்தின் கீழ் ஆட்கள் குழுவொன்றினால் புரியப்படும் தவறெதனதும் விடயத்தில்—

(அ) அத்தகைய ஆட்கள் குழுவானது கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருக்குமிடத்து, அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளர், செயலாளர் அத்துடன் அலுவலர் ஒவ்வொருவரும், அத்தவறுக்கு குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும்;

(ஆ) அவ்வாட்கள் குழுவானது குழுமமொன்றாகவிருக்குமிடத்து, அக்குழுமத்தின் பங்காளர் ஒவ்வொருவரும், அத்தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும்.

ஆயின், அத்தகைய ஆள் எவரும் தவறானது அவருக்குத் தெரியாமல் புரியப்பட்டதெனவோ அல்லது தவறு புரியப்படுவதைத் தடுப்பதற்கு அவர் எல்லா விழிப்புக் கவனத்தையும் பிரயோகித்தார் எனவோ, எண்பித்தால் அவர் இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியெனக் கருதப்படலாகாது.

பொருள்கோடல்.

39. இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலொழிய—

'உள்ளூரதிகாரசபை' என்பது, ஏதேனும் மாநகரசபை, நகாசபை அல்லது பிரதேச சபை எனப் பொருள்படும், அத்துடன் அத்தகைய ஏதேனும் சபையினால் அல்லது பிரதேச சபையினால் பிரயோகிக்கப்படும், புரியப்படும் அல்லது நிறைவேற்றப்படும் தத்துவங்கள் கடமைகள், அத்துடன் பணிகள் ஆகியனவற்றுக்கு நேரொத்த அல்லது அவற்றைப் போன்ற தத்துவங்கள், கடமைகள், அத்துடன் பணிகள் ஆகியனவற்றைப் பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு அத்துடன் நிறைவேற்றுவதற்கு என, ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட ஏதேனும் அதிகார சபையையும் உள்ளடக்கும்;

"பகிரங்க நிறுவனம்" என்பது—

(அ) ஏதேனும் அமைச்சு, அத்துடன் அத்தகைய அமைச்சின் கீழான ஏதேனும் திணைக்களம் என;

(ஆ) ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனம் அல்லது நியதிச்சட்ட நிறுவனம் என;

(இ) ஏதேனும் மாகாணசபை அல்லது உள்ளூரதிகாரசபை என ; அத்துடன்

(ஈ) அரசாங்கத்துக்கு உரித்தாக்கப்பட்டுள்ள, அல்லது அரசாங்கத்தினால் முழுமையாக அல்லது அரசாங்கத்தின் சார்பில் முழுமையாகச் சொந்தத்தில் வைத்திருக்கப்படும் ஏதேனும் தொழில் பொறுப்பு முயற்சி, குழுமம், கம்பெனி அல்லது வேறு நிறுவனம் என,

பொருள்படும்.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

40. இச்சட்டத்தில் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 ; (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.